**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No. 64/2023**

PW-4

| | | | |
|---|---|---|---|
| Name | ஸ்ரீதர் பாபு(PW4) | | |
| Father's Name | செந்தில் அழகன் | தொழில் | |
| Village | குகை | | |
| Taluk | சேலம் | Age | **51** |
| District | சேலம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th **day of August 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(A6 Produced, A2 to A5 Absent, Petition filed and allowed)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். கடந்த 09.09.2019 ம் தேதி மாலை 3 மணி அளவில் நீலமேகம் என்னை அழைத்து அவிநாசி வரையில் சென்று வரலாம் என்று சொன்னார். வரும் வழியில் நீலமேகம் என்னிடம் தனக்கு ஒரு இடத்தில் இருந்து பணம் வர வேண்டும் என்றும் அதற்காக தான் அவிநாசி செல்கிறோம் என்றும் சொன்னார். வரும் வழியில் நீலமேகம் போனில் பேசிக்கொண்டே வந்தார். மாலை 6:30 மணி அளவில் அவிநாசிக்கு வெளியே அவருடைய சியாஸ் காரை நிறுத்தினார். பணம் கொடுக்க வேண்டிய நபர் தன்னை அங்கே நிற்க சொன்னதாக சொன்னார். நாங்கள் இருவரும் காரை விட்டு இறங்கி வெளியே நின்று பேசிக்கொண்டு இருந்தோம். அப்போது பொலிரோ போன்று ஒரு கார் அங்கே வந்தது. அதில் இருந்து நான்கு ஐந்து பேர் இறங்கி வந்தார்கள். நான் அவர்கள் ஏதோ கேட்க வருகிறார்கள் என்று நினைத்தேன். வந்தவர்கள் நீலமேகத்தை அடிக்க ஆரம்பித்தார்கள். என்னை அவர்கள் கண்டு கொள்ளவில்லை. நான் தடுக்க முயன்ற போது என்னையும் தாக்க வந்தார்கள். என்னால் அவர்களை சமாளிக்க முடியாது என்று நான் அங்கிருந்து தப்பித்து சென்று விட்டேன். யாரையாவது கூப்பிடலாம் என்று தேடிய போது அங்கு ஒரு டயர் கடை மற்றும் தள்ளுவண்டி கடை இருந்தது. ஆனால் பூட்டி இருந்தது. நான் டயர் கடைக்கு பின்னால் நின்று கொண்டு பார்த்தேன். இருட்டாக இருந்ததால் நிழல் உருவமாகத்தான் எல்லோரும் தெரிந்தார்கள். சிறிது நேரத்தில் இரண்டு கார்களும் அங்கிருந்து கிளம்பி சென்று விட்டது. நான் அந்த இடத்தில் இருந்து ஓடிய போது நீலமேகத்தையும் காரில் ஏற்றுங்கள் என்று சொன்ன விபரம் காதில் விழுந்தது. நான் என்ன செய்வது என்று தெரியாமல் ரோட்டை கடந்து நடந்து

சென்று கொண்டு இருந்தபோது சுமார் 40 நிமிடங்கள் கழித்து நீலமேகம் வேறு ஒரு நம்பரில் இருந்து என்னை அழைத்தால்.தான் பாதுகாப்பாக இருப்பதாகவும் கொஞ்சம் அடிபட்டு இருப்பதாகவும் சொல்லி என்னை சேலத்திற்கு திரும்பி போக சொன்னார். நான் சேலம் கிளம்பி சென்று விட்டேன். மறுநாள் மதிய நேரம் நீலமேகம் எனக்கு போன் செய்து அவரை கடத்திக்கொண்டு சென்றவர்கள் அவரின் செல்ஃபோன், பர்ஸ் மற்றும் அவரது பொருட்களை பிடுங்கி சென்று விட்டதாகவும் நான் அவிநாசி காவல் நிலையத்தில் புகார் சென்று கொடுப்பதாகவும் என்னையும் காவல் நிலையத்திற்கு வந்து நடந்ததை சொல்லுமாறு கேட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் நின்று கொண்டு இருந்த இடம் எந்த இடம் என்று எனக்கு குறிப்பிட்டு தெரியுமா என்றால் அப்போது எனக்கு தெரியாது பின்னால் அது தெக்கலூர் என்று கேட்டு தெரிந்து கொண்டேன். போலீசார் விசாரித்து தெக்கலூர் என்று சொன்ன பின்பு தெரிந்து கொண்டேன் என்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். அங்கு தெரு விளக்குகள் இல்லை. நாங்கள் எந்த திசையை நோக்கி நின்று கொண்டிருந்தோம் என்றால் கோயம்புத்தூரை நோக்கி நின்று கொண்டிருந்தோம் திசை எனக்கு தெரியவில்லை. நானும் நீலமேகமும் எந்த திசையை நோக்கி நின்று கொண்டிருந்தோம் என்றால் காருக்கு அருகில் நின்று கொண்டிருந்தோம் திசை எனக்கு ஞாபகம் இல்லை. அந்த பொலிரோ வாகனம் கோயம்புத்தூர் செல்லும் திசையை நோக்கி நாங்கள் நின்று கொண்டு இருந்த காருக்கு பின்னால் இருந்து வந்தது. அந்த வாகனம் என்ன நிறம் என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது இருட்டு நேரமாக இருந்தது. சம்பவம் நடந்த நேரத்தில் என் பாக்கெட்டில் செல்போன் இருந்தது என்றால் சரிதான். அவசர உதவி எண் 100 க்கு அழைத்து தகவல் சொல்லலாம் என்று எனக்கு தெரியும் என்றால் அந்த பதட்டத்தில் எனக்கு போன் செய்ய முடியவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்ன சந்ததிகளை தவிர வேறு எந்த சந்ததியையும் நீலமேகம் என்னிடம் சொல்லவில்லை. சம்பவம் நடந்த இடத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் நான் நீலமேகம் என் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அழைக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| <br><br><br><br>**சாட்சியின் கையொப்பம்** | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |